பிரஸார் பாரதி
<u>அகில இந்திய வானொலி, சென்னை-4</u>
04 04 2024 6 45
<u>வியாழக்கிழமை</u> காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சமூகநீதியை காக்கவும், ஜனநாயகத்தை பாதுகாக்கவும் தமது கட்சி பாடுபட்டு வருவதாக திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் திமுக ஆட்சியில் தொழில்கள் நலிவடைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிச்சாமி குற்றம்சாட்டியுள்ளார்.
- கடந்த பத்து ஆண்டுகளாக ஊழலற்ற ஆட்சியை பிஜேபி வழங்கி இருப்பதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.
- சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.
- ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் கொல்கத்தா 106 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<u>*----- இனி விரிவான செய்திகள் --*</u>

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது தங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

திருவண்ணாமலையில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின், சமூகநீதியை காக்கவும், ஜனநாயகத்தை பாதுகாக்கவும் தமது கட்சி பாடுபட்டு வருவதாகக் கூறினார்.

தமது அரசு கொண்டு வந்துள்ள காலை உணவு திட்டத்தின் மூலம் 16 லட்சம் குழந்தைகள் பயன்பெறுவதாக அவர் தெரிவித்தார்.

மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் மூலம் ஒரு கோடியே 15 லட்சம் மகளிர் பயனடைந்து வருவதாக அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

கச்சத்தீவு விவகாரத்தை பிஜேபி தற்போது தேவையின்றி எழுப்பி வருவதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

திருப்பூரில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், புலனாய்வு அமைப்புகளை மத்திய அரசு தவறாக பயன்படுத்தி வருவதாக குற்றம்சாட்டினார்.

**[]<<<>>>[]**

நாமக்கல்லில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, தமிழகத்தில் திமுக ஆட்சியில் தொழில்கள் நலிவடைந்துள்ளதாக குற்றம்சாட்டினார்.

மாநிலத்தில் அனைத்து துறைகளிலும் முறைகேடுகள் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கான நலத்திட்டங்களை மாநில அரசு முறையாக செயல்படுத்தவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

**[]<<<>>>[]**

கும்முடிப்பூண்டியில் பிரச்சாரம் மேற்கொண்ட தேமுதிக பொதுச்செயலாளர் திரு பிரேமலதா விஜயகாந்த், தமிழகத்தில் போதைப் பொருட்களின் புழக்கம் அதிகரித்துள்ளதாகக் குற்றம்சாட்டினார்.

இதனை தடுக்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க தவறிவிட்டதாக அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

கடந்த பத்து ஆண்டுகளாக ஊழலற்ற ஆட்சியை பிஜேபி வழங்கி இருப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

கோவை மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தற்போது நடைபெறும் தேர்தல் அடுத்த 25 ஆண்டுகளுக்கான அடித்தளம் என்று தெரிவித்தார்.

நாட்டின் உள்கட்டமைப்பு, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி திட்டங்களை செயல்படுத்தி உள்ளதாகவும் திரு அண்ணாமலை கூறினார்.

**[]<<<>>>[]**

தருமபுரியில் பிரச்சாரம் மேற்கொண்ட பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு, உலக நாடுகள் ஆச்சரியப்படும் வகையில் சக்தி வாய்ந்த தலைவராக பிரதமர் திரு நரேந்திரமோடி திகழ்வதாகக் கூறினார்.

தருமபுரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பாமக மேற்கொண்ட முயற்சியின் காரணமாக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதகா அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

கச்சத்தீவு விவகாரத்தில் காங்கிரஸ் தவறு செய்துள்ளதாக தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு ஜி கே வாசன் கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், குலசேகரப்பட்டினத்தில் ராக்கெட் ஏவதளம் அமைய பிஜேபி அரசுதான் காரணம் என்றும், இதன்மூலம் இப்பகுதி மக்கள் பயனடைவார்கள் என்றும் தெரிவித்தார்.

மகளிர் மேம்பாட்டுக்காக பிஜேபி அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் திரு ஜி கே வாசன் எடுத்துரைத்தார்.

**[]<<<>>>[]**

மக்களவை தேர்தலை ஒட்டி பல்வேறு தொகுதிகளைப் பற்றி அறிந்து கொள்ளும் 'தொகுதி அலசல்' தொகுப்பில் தருமபுரி மக்களவைத் தொகுதி குறித்து எமது செய்தியாளர் தரும் தகவல் . . ..

*( வாய்ஸ் பைட் - தண்டபாணி ) -95-- செகண்ட்ஸ்)*

**[]<<<>>>[]**

சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான மனு நீதிபதிகள் திரு சுரேஷ்குமார், திரு அருள் முருகன் அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

சட்ட விரோத கட்டுமானங்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்க அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் சிறப்பு கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து உள்ளாட்சி அமைப்புகளில் சட்ட விரோத கட்டுமானங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து, துறை சார்ந்த செயலாளர்கள் அறிக்கை அளிக்க வேண்டும் எனவும்

அதன் அடிப்படையில் தமிழக அரசு நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டு, வழக்கை ஒத்தி வைத்தனர்.

[]<<<>>>[]

வடலூரில் சத்திய ஞானசபையை சுற்றியுள்ள இடத்தில் அமைக்கப்படும் வள்ளலார் சர்வதேச மையத்தில் என்னென்ன வசதிகள் செய்யப்பட உள்ளன என்பது குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு தலைமை நீதிபதி திரு கங்கா பூர்வாலா மற்றும் நீதிபதி சத்திய நாராயண பிரசாத் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தது.

இது குறித்த விவரங்களை அறிக்கையாக தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை இம்மாதம் 24-ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

[]<<<>>>[]

தமிழகத்தில் சீரான மின் விநியோகத்துக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து, மாநில மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தமிழகத்தில் மின் நுகர்வு இதுவரை இல்லாத அளவாக 430 புள்ளி ஒன்று மூன்று மில்லியன் யூனிட்டை எட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மேலும் கூடுதல் மின் தேவை மற்றும் நுகர்வு ஏற்பட்டாலும்கூட அதை எதிர்கொள்ளத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாநில மின்துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

மயிலாடுதுறை அருகே சிறுத்தை நடமாட்டம் உள்ளதை அடுத்து பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு வனத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள குறிப்பிட்ட சில தொடக்கப் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - மணிகண்டன் ) -40- செகண்ட்*

[]<<<>>>[]

யுக்ரைனில் ராணுவத்தில் சேர்வதற்கான குறைந்தபட்ச வயது வரம்பு 25 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

அபுதாபியில் திறக்கப்பட்டுள்ள இந்துக் கோவிலில் ஒரே மாதத்தில் மூன்றரை லட்சம் பேர் வழிபாடு செய்திருப்பதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

புதிய திட எரிபொருள் நடுத்தர தொலைவு ஹைபர்சானிக் ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்துள்ளதாக வட கொரியா கூறியுள்ளது.

[]<<<>>>[]

சத்தீஸ்கர் மாநிலம் பிஜப்பூர் பகுதியில் நக்ஸலைட் தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த துப்பாக்கி சண்டையில் உயரிழந்தவர்களின் எண்ணிக்கை 13-ஆக அதிகரித்துள்ளது.

[]<<<>>>[]

கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியில் மக்களவைத் தேர்தலை ஒட்டி, காவல்துறையினர் மற்றும் துணை ராணுவ படையினர் நேற்று கொடி அணிவகுப்பு நடத்தினர்.

[]<<<>>>[]

தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி சென்னையில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுவர் விளம்பரங்கள், சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் அகற்றப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

சென்னை-நாகர்கோவில் இடையே இம்மாதத்தில் வியாழக்கிழமைகளில் வந்தே பாரத் சிறப்பு ரயில் சேவை இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி 106 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஏழு விக்கெட் இழப்புக்கு 272 ரன் எடுத்தது.

273 ரன் என்ற வெற்றி  இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி 17 புள்ளி இரண்டு ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 166 ரன் மட்டுமே எடுத்து தோல்வி அடைந்தது.

அகமதாபாத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

[]<<<>>>[]